# 20

# கலீபா உஸ்மான் றழியல்லாஹு அன்ஹு

" أَلا أَسْتَحِي مِنْ رَجُلٍ تَسْتَحِي مِنْهُ الْمَلائِكَةُ " (رواه مسلم)

மலக்குகளே அவரைக் கண்டு நாணப்படும் ஒரு மனிதனுக்கு நான் நாணப்படக் கூடாதா?

## *கலீபா உஸ்மான் றழியல்லாஹு அன்ஹு*

உஸ்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் குறைஷிக் கோத்திரத்தின் உமைய்யாப் பரம்பரையில் கி.பி. 576ல் பிறந்தார்கள். அழகிய தோற்றமும் வெட்க சுபாவமும் கொண்ட இவர்கள் தனது தந்தையைப் பின்பற்றி மக்காவின் சிறந்த வர்த்தகர்களுள் ஒருவராகவும் செல்வந்தராகவும் மாறியிருந்தார்கள். எழுத்தறிவு, இலக்கியம், வரலாறு போன்ற துறைகளிலும் சிறந்து விளங்கினார்கள். விவேகமும் சிறந்த ஆளுமையும் கொண்ட இவர்கள் தர்மம் செய்வதில் அதிக விருப்பம் கொண்டிருந்தார்கள். ஆதலால், குறைஷியர் மத்தியில் இவருக்குப் பெரு மதிப்பும் மரியாதையும் கிடைத்திருந்தன.

இஸ்லாத்தில் நுழைந்த முதல் பத்துப்பேருள் ஒருவரான உஸ்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்கள், அபூபக்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்களது அழைப்பினால் இஸ்லாத்தை ஏற்றார்கள். அப்போது அவர்களுக்கு வயது முப்பத்து நான்காகும். அன்று தொடக்கம் இஸ்லாத்தைப் பின்பற்றுவதிலும் பிரச்சாரம் செய்வதிலும் முழுமையாக ஈடுபட்டார்கள். அதற்காகத் தனது செல்வத்தைத் தாராளமாகச் செலவிட்டார்கள்.

## ஆளுமைப் பண்புகள்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் அனைத்து விடயங்களிலும் பங்கேற்ற இவர்கள், ஸஹாபாக்கள் மத்தியில் அபூபக்ர், உமர் றழியல்லாஹு அன்ஹுமா ஆகியோருக்கடுத்த நிலையில் கணிக்கப்பட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் பல முறை சுவன வாக்குறுதியைப் பெற்றுக் கொண்டதோடு அஷறதுல் முபஷ்ஷறாஹ் சுவனம் நன்மாராயம் கூறப்பட்ட பத்துப் பேர்களுள் ஒருவராகவும் காணப்படுகிறார்கள். எழுத்தறிவு பெற்றிருந்தவராதலால் வஹியை எழுத்துருவில் பாதுகாக்கும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

ஒருவர் பின் ஒருவராக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இரு பெண்மக்களைத் திருமணம் செய்து அவர்களுடன் சிறப்பாக வாழ்க்கை நடத்திய காரணத்தால் இவர் 'துன்னூறைன்' எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார்கள். 'வானவர்கள் வெட்கப்படும் ஒருவருக்கு நான் ஏன் வெட்கப்படக்கூடாது' (முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டது இவர்களது நாணமிகு இயல்புக்கு சிறந்த சான்றாகும்.

முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட முதல் ஹிஜ்ரத்திலும் ஏனைய ஹிஜ்ரத்களிலும் பங்கேற்றுள்ளார்கள். ஹிஜ்ரி ஆறாம் ஆண்டில் உம்றாப் பயணத்தின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமாதானத் தூதுவராகக் குறைஷியரிடம் அனுப்பப்பட்டார்கள்.

இவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் முழுமையாக இணைந்து செயலாற்றிய அவர்கள் கலீபா அபூபக்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்களது நிர்வாகத்தில் ஷூறா சபையின் முக்கிய உறுப்பினராக ஓர் அமைச்சரின் ஸ்தானத்திலிருந்து பங்களிப்புச் செய்துள்ளர்கள். அவ்வாறே கலீபா உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களது காலத்திலும் அவருக்கு மிக நெருக்கமாக இருந்து ஆலோசனைகள் வழங்கி நிர்வாகப் பணிக்கு உதவி செய்தார்கள்.

## கலீபாவாக நியமனமும் சேவைகளும்

கலீபா உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அபூலுஃலுஆவின் தாக்குதலுக்குள்ளாகி நிலைமை மோசமானபோது, அங்கு குழுமியிருந்த ஸஹாபாக்கள் அவரை விழித்து, ''அமீருல் முஃமினீன் அவர்களே! எங்களுக்கு வஸிய்யத் செய்யுங்கள். அத்துடன் உங்களுக்குப் பின்னால் ஒருவரைக் கலீபாவாக நியமியுங்கள்'' என கேட்டுக்கொண்டார்கள். ''அதற்கு மிகப்பொருத்தமானவராக (சுவனம் வாக்களிக்கப் பட்டவர்களில் மீதமுள்ள) அறுவரில் ஒருவரையே நான் காண்கிறேன் எனக் கூறி, உஸ்மான், அலீ, தல்ஹா, ஸுபைர், அப்துர் றஹ்மான் இப்னு அவ்ப், ஸஃத் இப்னு அபீவக்காஸ் றழியல்லாஹு அன்ஹும் ஆகிய அறுவரையும் நியமித்தார்கள். அவர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தெரிவு செய்யும்படி அறிவுறுத்தினார்கள்.

 இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

உமர் றழியல்லாஹு அன்ஹு வபாத்தாகி அடக்கம் செய்யப்பட்ட பின் குறிப் பிட்ட அறுவரும் ஒன்றுகூடினர். நீண்ட கருத்துப்பரிமாற்றங்களின் பின்னர் உஸ்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபாவாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். அப்துர் ரஹ்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் பைஅத் செய்ததைத் தொடர்ந்து ஏனைய ஸஹாபாக்களும் பைஅத் செய்தனர்.

## பணிகளும் பங்களிப்பும்

### 1. அல்குர்ஆனைப் பாதுகாத்தல்

உஸ்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பக்கத்திலிருந்து வஹீ எழுதும் குத்தாபுல் வஹியில் ஒருவராகப் பணியாற்றினார்கள். பிற்காலத்தில் அரபியரல்லாத பலர் இஸ்லாத்தை ஏற்றதனால் அல்குர்ஆனை ஓதுவதில் அவர்கள் மத்தியில் குழப்பநிலை காணப்பட்டது. எனவே, கலீபா அபூபக்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் தொகுக்கப்பட்டு, ஹப்ஸா றழியல்லாஹு அன்ஹா அவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த அல்குர்ஆன் பிரதியின் அடிப்படையில் எட்டுப் பிரதிகளை உருவாக்கினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் காதிபுல் வஹியாகவும், அபூ பக்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் அல்குர்ஆனை எழுத்துருப்ப டுத்தும் குழுவின் தலைவராகவும் அனுபவமும் அங்கீகாரமும் பெற்றிருந்த ஸைத் பின் ஸாபித் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் தலைமையிலேயே இப்பணி நடைபெற்றது. கலீபா அப்பிரதிகளை அல் குர்ஆனைச் சரிவர ஓதுவதில் பயிற்சி பெற்ற காரிகளுடன் அனுப்பி வைத்தார்கள். இதன் மூலம் அல்குர்ஆனை ஓதுவதில் காணப்பட்ட முரண்பாடுகள் நீங்கி அனைவரும் ஒரே விதமாக ஓதுவதை உறுதிப்படுத்தினார்கள். இது அவருக்கு 'ஜாமிஉல் குர்ஆன்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றுக்கொடுத்தது.

### 2. கடற்படையை உருவாக்கல்

இஸ்லாத்தின் தூதை அரேபியத் தீபகற்பத்திற்கு வெளியே கடல் கடந்து கொண்டு செல்லவும் எதிரிகளிடமிருந்து வந்த சவால்களை எதிர்கொள்வதற்காகவும் கடற்படை ஒன்றை நிறுவுவதற்கு முழு அங்கீகாரமும் ஒத்தாசையும் வழங்கினார்கள். ஷாம் பிரதேச கவர்னராகப் பணிபுரிந்த முஆவியா றழியல்லாஹு அன்ஹு அவர்களின் தலைமையில் ஹிஜ்ரி 27 இல் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### 3. ஆட்சி விஸ்தரிப்பு

முதலிரு கலீபாகளினதும் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படன. இவரது ஆட்சியில் அலெக் சாந்திரியா, எகிப்தின் தென்பகுதிகள், தூனிஸிய்யா, மொரோக்கோ போன்ற வட ஆபிரிக்காவின் பல பகுதிகளிளும், மத்திய தரைக்கடல் தீவுகளிலும் பாரசீக பிராந்தியங்களிலும் இஸ்லாமிய ஆட்சி பரவியது.

### 4. அரசியல் நிர்வாக ரீதியான பங்களிப்புக்கள்

அரசியல் ரீதியிலும் இஸ்லாமிய உலகுக்குப் பல பங்களிப்புக்களை வழங்கியுள்ளார்கள். முன்சென்ற இரு கலீபாக்களாலும் முன்னெடுக்கப்பட்ட நிர்வாகப் பணிகளைத் தேவையான மாற்றங்களுடன் மிகச் சிறப்பாக முன்னெடுத்தார்கள்.

### 5. அபிவிருத்திப் பணிகள்

ஹிஜ்ரி 26 இல் மஸ்ஜிதுல் ஹறாமையும், ஹிஜ்ரி 29 இல் மஸ்ஜிதுந் நபவியையும் விஸ்தரித்தார்கள். பைதுல் மாலின் பணிகளைப் பரவலடையச் செய்தார்கள். கால்வாய்கள், பாதைகள், பொதுக்கிணறுகள் அமைத்தல் முதலான கீழ்கட்டுமானப் பணிகளில் அதிக ஈடுபாடுகாட்டினார்கள்.

இவ்வாறு பரந்து விரிந்ததொரு சாம்ராஜ்யத்தை நிர்வகித்த கலீபா, அவர்கள் காலத்தின் பொருத்தப்பாட்டுக்கேற்ப நிர்வாகத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். எனினும் இதனைத் தவறாக விமர்சித்த எதிரிகள் முஸ்லிம்களுக்கு மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தி இஸ்லாமிய அரசைப் பலவீனப்படுத்தும் தமது திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முயன்றனர். இதில் நிலைமையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாத சில முஸ்லிம்களும் சிக்கிக் கொண்டனர். இக்குழப்ப நிலையைத் தோற்றுவிப்பதில் அப்துல்லாஹ் இப்னு ஸபாஃ என்ற யூதன் முழுப் பங்காற்றினான்.

இதனால் ஏற்பட்ட பிரச்சினைகளின் போது கலகக் காரர்களால் கலீபா உஸ்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் சுற்றி வளைக்கப்பட்டு ஹிஜ்ரி 35 ஆம் ஆண்டு தமது 82 ஆம் வயதில் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

❖ العَشَرَةُ المبَشَّرَةُ ❖ كَاتِبُ الوَحْيِ ❖ جَامِعُ الْقُرْآنِ ❖ ذُو النُّورَيْنِ

**பயிற்சி**

1. கலீபா உஸ்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் துன்னூறைன் என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
2. அல்குர்ஆனுக்கு உஸ்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் செய்த சேவைகளை விளக்குக.
3. இஸ்லாமிய உலகில் முதன்முதலில் கடற்படையை உருவாக்கிய பெருமை உஸ்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்களையே சாரும். இதுபற்றி நீர் கற்ற பின்னணியில் எடுத்துரைக்க.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக